**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் OS.No.213/2011 D.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

பெயர் இந்துமதி

க/பெ. கண்ணன்

வயது 67

தொழில் **மின்சார மதிப்பீட்டு அலுவலர், ஓய்வு**

**முதல் விசாரணை 14.07.2025**

நான் இந்த வழக்கில் 6வது பிரதிவாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 27.03.1967 தேதியிட்ட 1 மற்றும் 6வது பிரதிவாதிகளின் கிரயதாரர் ஆறுமுகம் என்பவர் கிரய ஆவண எண்.387/1967 கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1. 25.06.1981 தேதியிட்ட அருணாச்சலம் என்பவர் ஆறுமுகத்திற்கு கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2. 18.11.1998 தேதியிட்ட 1ம் பிரதிவாதி, ஆறுமுகத்திற்காக கன்னியப்பனுக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.3. 11.09.2006 தேதியிட்ட ஆறுமுகம், 6வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சான்றிட்ட நகல் பி.சா.ஆ.4. 11.09.2006 தேதியிட்ட ஆறுமுகம், 1வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சான்றிட்ட நகல் பி.சா.ஆ.5.

தாவா தள்ளுபடி ஆக வேண்டுகிறேன்

(வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)